★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 21உ புதன் (4–7–56) ☆ ★ வெளியீடு: ஆனி 22உ வியாழன் (5–7–56) [இதழ் 17

மாணவர்களுக்கு சம்பளச் சலுகை

நாகபுரி, ஜூலை 3—

6 முதல் 14 வயதுள்ள எல்லா மாணவர்களுக்கும் பள்ளிச் சம்பளத்தில் முழுச்சலுகை அளிப்பதென மத்தியப் பிரதேச சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்.

இருபது ஏக்கருக்குக் குறைந்த நிலமுள்ள குடியானவர்களின் குழந்தைகளுக்கும், 50 ஏக்கருக்குக் குறைவான நிலமுள்ள அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கும் (வருமான வரி, தொழில் வரி செலுத்தாமலிருந்தால்) 'மெட்ரிகுலேஷன்' வரையில் இந்தச் சலுகை அளிக்கப்படுமென்றும், இதுபற்றிய உத்தரவு எல்லாம் பள்ளிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளதென்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

பஞ்சாப் படுகொலையின் எதிரொலி

இராஜ்ய காங்கிரஸ் ஆட்சியின் எதேச்சாதிகாரம்

மாகாண பத்திரிகைகளுக்கு செய்தித் தணிக்கை

டில்லி இதழ் பஞ்சாபிற்குள் வரக்கூடாது எனத் தடை

புதுடில்லி, ஜூலை 4—

பஞ்சாப் மொழி வழி வட்டார ஏற்பாட்டிற்கு எதிர்ப்பாக நடந்த ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் ஆட்சி, ஆங்கில ஏகாதிபத்திய வெறியர்களும் வெட்கித் தலைகுனியும் அளவிற்கு, இரத்த வெறிகொண்டு நடந்து இருக்கிறது என்ற விவரம் விளக்கமாக நேற்று தரப்பட்டது.

அதன் எதிரொலியாக தனது மாகாணத்தில் நடைபெறும் செய்தித் தாள்களை ஒடுக்குவதிலும் பஞ்சாப் காங்கிரஸ் ஆட்சி தீவிரம் காட்டத் தொடங்கி இருக்கிறது.

ஜலந்தர் நகரிலிருந்து வெளிவரும் உருது மொழிப் பத்திரிகையான 'பிரதாப்', இந்தி மொழி இதழான 'வீர அர்ச்சுன்', உருது மொழித் தாளான 'இந்த் சமாச்சார்' ஆகிய மூன்று தினசரிகளும் வெளியிடும் செய்திகளை, அரசாங்க ஒப்புதல் பெற்ற பிறகே வெளியிடவேண்டும் என்ற கட்டளையை பஞ்சாப் காங்கிரஸ் ஆட்சி நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கிறது.

இவ்வாறு செய்திகளை முன்கூட்டி தணிக்கைச் செய்யும் அக்கிரம ஏற்பாடு இரண்டு மாதங்களுக்கு அமுலில் இருக்கும்.

'பிரதாப்', 'வீர அர்ச்சுன்' ஆகிய இரண்டு இதழ்களும் டில்லியிலிருந்து வெளியாகின்றன; அதனால், தம்முடைய ஜலந்தர் பதிப்புகளை ஒரு கிழமை அறவே பிரசுரிக்காது நிறுத்தி விட்டன.

ஆனால், 'இந்த் சமாச்சார்' என்ற இதழ் மட்டும் உருக்குலைந்து உற்சாகமிழந்து ஜலந்தரிலிருந்து வெளிவருகிறது.

'இந்த் சமாச்சார்' என்ற உருது மொழி இதழ், லாலா ஜெகத் நாராயணன் நிர்வாகத்தின்கீழ் நடைபெற்று வருவதாகும்.

அவர் ஒரு காங்கிரஸ் தலைவர்; பஞ்சாப் காங்கிரஸ் செயற்குழுவில் இருக்கும் செல்வாக்கு மிகுந்த ஒரு கும்பலின் தலைவராவார். அதுவுமன்றி, பீம்சேன் சச்சார் மந்திரி சபையில் கல்வி போக்குவரத்து அமைச்சராக லாலா ஜெகத் நாராயணன் இருந்திருக்கிறார்.

'பிரதாப்' தலையங்கங்களில் பெரும் பகுதி, லாலா கையொப்பத்துடன் வருவது வழக்கம்.

ஜலந்தரிலிருந்து வெளிவந்துக் கொண்டிருந்த 'பிரதாப்' இதழ் நிறுத்தப் பட்டதுடன், டில்லியிலிருந்து வெளிவரும் 'பிரதாப்,' பஞ்சாப் மாகாணம் முழுதும் அதிகமாக விற்பனையாயின.

இப்படி டில்லி 'பிரதாப்' இதழ் பஞ்சாபில் கூடுதலாவது காங்கிரஸ் ஆட்சியினருக்கு மனம் பொறுக்கவில்லை; எனவே, டில்லி 'பிரதாப்' இதழ் பஞ்சாப் எல்லைக்குள் வரக்கூடாது—எங்கும் விற்பனையாகக் கூடாது எனத் தடை யுத்தரவு (144 கி. பி. கோ.) ஒன்றைப்போட்டு இருக்கிறது; இதன் விளைவாக, டில்லி 'பிரதாப்' வெளிப்படையாக பஞ்சாபில் உலாவுவதற்கு இல்லை.

தணிக்கை முறையை எதிர்த்து, மாவட்ட நீதி மன்றத்தில் ஜலந்தர் 'பிரதாப்' இதழின் உரிமையாளரும் ஆசிரியருமான முன்னாள் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் வீரேந்திரா எ. பவர் வழக்குத் தொடுத்திருக்கிறார்.

பொதுவுடைமை சீனாவை சிரியாவும் ஏற்றது

பெய்ரூத், ஜூலை 3—

சிரியா, பொதுவுடைமை சீனாவை ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளதாம்; இவ்வாறு ஏற்றுக்கொள்ளுவது இரண்டாவது அரபு நாடு சிரியாவாகும்; முதலில் ஏற்றுக்கொண்ட நாடு எகிப்து.

செங்கடலில் புதிய கோட்டை எழுகிறது!

செங்கடலில், யேமன் நாட்டுக்காக புதிய கோட்டை ஒன்றைக் கட்டுவதாக ரஷ்யா கூறியுள்ளதாம். ரஷ்யாவின் திட்டத்தை யேமன் கொள்கை யளவில் ஒப்புக்கொண்டுள்ளதெனத் தெரிய வருகிறது.

கண்ணுக்குத் தெரியாத காமன்வெல்த் கூட்டுறவு

நேரு கொள்ளும் பெருமிதம்

லண்டன் ஜூலை 3—

"நாடுகளுக்கிடையேயுள்ள எல்லா உறவுகள், ஒப்பந்தங்களையும் விட கண்ணுக்குத் தெரியாத இந்தக் காமன்வெல்த் கூட்டுறவே மிகச் சிறந்தது. உலகில் எல்லா நாடுகளும் இத்தகைய நல்லுறவை தமக்கிடையே ஏற்படுத்திக்கொள்வது நல்லது," என்று இந்தியப் பிரதமர் நேரு, தனக்கு 'இலண்டன் சுதந்தரக் குடிமகன்' என்னும் நன்மதிப்பளித்த பின்னர், இலண்டன் நகராட்சி மண்டபத்தில் நடைபெற்ற விருந்தின்போது குறிப்பிட்டாராம்

மாராட்டிரருக்குள் மனமாச்சரியம்

பம்பாய்நகர் குறித்து கருத்துபிளவு

காங்கிரஸ் மேலிட சதியில் வெற்றி?

பம்பாய் நகர் உருவாக்கப்பட இருக்கிற மாராட்டிர மண்டலத்துடன் இணைய வேண்டும் என்ற கோரிக்கையில், மாராட்டிர மக்களிடை ஒரு துளியும் கருத்து வேற்றுமை இல்லாது இருந்தது.

இந்தியப் பிரதமரின் அநியாயத் தீர்ப்புக்கு ஒருமனமாக எதிர்ப்புத் தெரிவித்தனர், மாராட்டிரர்கள்!

அந்த ஒற்றுமையைக் குலைக்க, காங்கிரஸ் மேலிடம், வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் முயற்சிகள் பல செய்தன.

இப்பொழுது அம்முயற்சி மெள்ள மெள்ள பலன்தரத் தொடங்கி இருக்கிறது.

மராட்டிரர்களிடை துவக்கத்தில் காணப்பட்ட கருத்து ஒற்றுமை இப்பொழுது சிதையத் தொடங்கிவிட்டது.

அச்சிதைவு மேலும் விரிவடையக்கூடும்.

மாராட்டிர காங்கிரஸ் குழுவிலேயே கருத்துப் பிளவு ஏற்பட்டு இருக்கிறது.

பம்பாய் நகரை வழக்காகக் கொண்டு, அரசாங்கத் துறையில் பதவியிலிருக்கும் காங்கிரஸ் கட்சியினர் பதவி விலகுவது குறித்து ஒரே கொள்கையை ஏற்கனவே காங்கிரஸ் கட்சியினர் உறுதியாகப் பெற்றிருந்தனர். அவ்வுறுதிப்பாடு மாறி, இரண்டு கருத்து அதில் இடம் பெறலாயின.

'விரும்புவோர் பதவியைத் துறக்கலாம்—விரும்பாதோர் பதவியிலேயே ஒட்டிக்கொண்டு இருக்கலாம்' என்ற ஒரு தீர்மானத்தைப் போட்டு, இருவகை கருத்துடையவர்களுக்கும் மேலும் மனக்கசப்பு வளராத வகையில், இரு சாராரையும் மாராட்டிர காங்கிரஸ் குழு திருப்தி படுத்த முயன்றிருக்கிறது.

அதற்கு நேர்மாறாக, மாராட்டிரர்களில் ஒரு சாராரைக்கொண்டு இயங்கிவரும் விதர்பா காங்கிரஸ் குழு, பம்பாய்நகர் குறித்து நேரு தந்துள்ள தீர்ப்பை நிபந்தனையுடன் ஏற்றுக்கொண்டு இருக்கிறது.

அதாவது, கூடுமான விரைவில் பம்பாய் நகர் மாராட்டிரத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை கோரிக்கையுடன், நேருவின் தீர்ப்பை விதர்பா காங்கிரஸ் குழு ஏற்றுக்கொண்டு தீர்மானித்திருக்கிறது.

ஆனால், நாகபுரி காங்கிரஸ் குழுவோ, நேருவின் தீர்ப்பை முழு மனதுடன் ஆதரித்துத் தீர்மானித்து இருக்கிறது.

நாகபுரி காங்கிரஸ் குழு தலைவர் தம்பாலிவார் என்பார், நேருவின் முடிவை ஆதரிப்பதுடன் நில்லாது, பம்பாய் நகரை மாராட்டிரர் கோருவதற்கு நியாயமே கிடையாது எனப் பேசும் அளவிற்குச் சென்று விட்டிருக்கிறார்!

மாகாண சீரமைப்புக் குழு பரிந்துரைகளை எதிர்த்துக் காப்பு, விதர்பா பிரதேசத்தைத் தனி மாகாணமாக்காமல், மாராட்டிர மாகாணத்துடன் இணைத்தது குறித்து, விதர்பா காங்கிரஸ் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறது.

இதுபற்றி, நாகபுரி காங்கிரஸ் குழு தீர்மான மூலமாக கருத்து அறிவிக்கவில்லையானாலும், தனிப்பட்ட முறையில் வெளிப்படையாகவே, காங்கிரஸ் குழு தலைவர் தம்பாலிவாரும், சுகாதார மந்திரி தன்னும்வாரும், விதர்பா இணைப்பில் தங்களுக்குள்ள அதிருப்தியை சுட்டிக் காட்டுகின்றனர்.

'தமிழ்நாட்டையே இனி திராவிட நாடாகக் கொள்கிறேன்'

'கன்னட, மலையாள மக்களுக்கு திராவிட இன உணர்வு இல்லை'

திராவிட நாடு குறித்து பெரியார் விளக்கம்

திருச்சி, ஜூலை 3—

"தமிழ்நாடு, கேரளம், தெலிங்க நாடு, கன்னட தேசம் ஆகியவை இணைந்தது தான் திராவிட நாடு என்று நான், 1938 முதல் கூறி வந்திருக்கிறேன்.

"இப்போது, மலபார், கன்னட மக்கள், திராவிட (இன) உணர்வு கொண்டவர்களாக இல்லை; ஆந்திரர்கள் தங்களுக்கென ஒரு தனி மாநிலம் அமைத்துக் கொண்டார்கள்.

"எனவே, தாங்கள் தமிழ் நாட்டின் அங்கங்கள், என்ற உணர்வு கொண்டோர், தமிழ் நாடு போதும் என்று திருப்திப்படுவோர் ஆகிய மக்களுடன் நின்று விடுவதே எனக்குத் திருப்திதரக் கூடியது என்று உணருகிறேன். 'கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆயிற்று' என்று பழமொழி கூறுவர்; 'எலும்பு மிஞ்சினால் போதும்' என்று எனக்கு இப்போது படுகிறது. எனவே, தமிழ் நாடுதான் திராவிட நாடு என்று நினைத்து நான் திருப்திப்படுகிறேன்,"

என்று பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள், பத்திரிகையாளருக்கு (திருச்சி நகர தி. க. தலைவர் தோழர் டி. டி. வீரப்பன் மூலம்) அறிக்கை ஒன்று தந்திருப்பதாக 'இந்து' சென்னை 4–7–56 இதழில் செய்தி வெளியிட்டிருக்கிறது.

அல்ஜீரியாவில் பிரெஞ்சுப் போக்கின் எதிரொலி

முடிதிருத்தும் தொழிலாளர் நிறுவனத்தின் முடிவு

"கராச்சியிலுள்ள பிரெஞ்சுத் தூதுவருக்கும், தூதுவராலுவலகத்தைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்களுக்கும் முடிவெட்டுவதில்லை; பிரெஞ்சுக் கடைகளிலிருந்து தங்கள் கடைகளுக்குத் தேவையான கருவிகளை வாங்குவதில்லை," என்று இங்குள்ள முடிதிருத்தத் தொழிலாளர் நிறுவனம் முடிவு செய்திருக்கிறது.

அல்ஜீரியாவில் பிரெஞ்சுக் கொள்கையைக் கண்டிப்பதற்காகவே மேற்கண்ட புது முறையை மேற்கொண்டிருக்கிறார்கள் முடிதிருத்தும் தொழிலாளர்கள்.

தெ. ஆ. பிரதமரின் இனவெறி

தென்னாப்பிரிக்காவில், சர்க்கார் கடைப் பிடிக்கும் இனவெறிக் கொள்கையைக் குறித்து விவாதிப்பதற்காக, வந்த பிரிட்டிஷ் தொழிற் கட்சி மக்கள்சபை உறுப்பினர் தூதுக் குழுவைச் சந்திக்க, தென் ஆப்பிரிக்கப் பிரதமர் ஜெ. ஜி. ஸ்டீரிடம் மறுத்து விட்டாராம்.

ரூ. 40 கோடி செலவில் குடியிருப்பு வசதியாம்

அடுத்த ஐந்தாண்டுகளில் இராணுவத்தினருக்கு வீடு கட்டித் தர ரூ. 40 கோடி செலவிடப்படுமென இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

நம் நாடு

திமு.கழக இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 4–7–'56 புதன்

யார் 'புரட்டர்'கள்?

ஐந்தாண்டுத் திட்டங்கள், டில்லி சர்க்காரின் ஏகாதிபத்திய நோக்கத்திற்கு மகோன்னதமான எடுத்துக் காட்டுகள் என்ற பேருண்மையை, திட்டங்களில் தென்னாட்டிற்கென ஒதுக்கப்பட்ட பங்கு உலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

ஆனால், இந்த உண்மையைத் திரையிட்டு மூடிவிட முயற்சித்த பலர், தோல்வியையே பலனாகப் பெற்ற பிறகு, தலை மறைவாக ஒதுங்கிவிட்டனர். தமிழ் நாட்டில், 'ஜீவிக்க' வேண்டுமே என்ற காரணத்திற்காக, உண்மையை ஒப்புக்கு ஒப்பியவர்களும் உண்டு. உணர்ந்த உண்மையை வெளியிடுவதின் மூலம், தென்னாட்டில் வளர்ந்தோங்கிவரும் வடநாட்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு அணிகளுக்குப் புதிய பலம் கிடைக்குமே என்ற அச்சத்திற்கு அடிமையாகிக் கிடப்போரும் இன்றும் இருக்கிறார்கள். நெடுநாளைக்கு முன்பே அறிந்த அந்த உண்மையை காலங் கடந்தேனும் பேசித் தீர வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானோரும் நிச்சயம் இருக்கிறார்கள்.

ஆனாலும், சில இரட்டை நாக்குப் படைத்தோர், 'பாலுக்கும் காவல் — பூனைக்கும் தோழன்' என்ற நிலையிலிருப்போர், உண்மையை ஒரு நேரம் ஒப்புவதும், மறுநேரம் மறுப்பதுமாக இருந்து வருகின்றனர். அவர்களின் பெயர்ப் பட்டியல், தமிழ் நாட்டு வாக்காளர் கையில் சீக்கிரமே தரப்படவிருக்கிறது, அவர்களுக்கெல்லாம் பாடம் புகட்டுவதற்காக!

முதல் ஐந்தாண்டுத் திட்டம், நமது அண்ணா அவர்கள் இராமநாதபுரம் மாவட்டச் சுற்றுப் பயணக் கூட்டம் ஒன்றில் குறிப்பிட்டதைப்போல, 'பழைய கதை'; இரண்டாம் திட்டத்தில் நிலை என்ன?

(சர்க்கார்) பொதுத்துறையில் சுமார் ரூ. 4,800 கோடியும், (முதலாளிகள்) தனியார் துறையில் ரூ. 2,100 கோடியும் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கார் துறைத் திட்டம் இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சுமார் 2,400 கோடி ரூபாய்வரை, மாநிலங்களின் திட்டங்கள்; அதாவது, மாநில சர்க்கார்கள், மத்திய சர்க்காரின் அனுமதியோடு தயாரித்து பணம் சேகரித்து நிறைவேற்ற வேண்டியவை; எஞ்சிய ரூ. 2,300 கோடியும், டில்லி சர்க்காரே நேரடியாகச் செலவிடுவார்கள், திட்டங்களுக்காக!

'மாநிலங்களின் திட்டங்களுக்கான செலவுக்கு டில்லி சர்க்காரும், மானியம—கடன் என்று உதவிகளைத் தரும்' என்றும், கூறப்பட்டிருக்கிறது. மாநில சர்க்கார்களின திட்டங்களுக்கென ஒதுக்கப்படும் ரூ. 2,400 கோடியில்தான், சென்னை நிதிமந்திரி சுப்பிரமணியம், மக்கள் தொகை அடிப்படையில் ரூ. 220 கோடியேனும் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று வாதிட்டு வந்திருக்கிறார். இந்த நியாயத்தைக்கூட டில்லி சென்னைக்கு வழங்கவில்லை. சுமார் ரூ. 170 கோடிக்கான திட்டத்தை மட்டுமே அங்கீகரித்திருக்கிறார்கள்.

டில்லி சர்க்கார் தாங்களே நேரடியாகச் செலவிட உத்தேசித்திருக்கும் ரூ. 2,400 கோடி திட்டங்களும் இந்தியாவின் எந்தப் பகுதி நலனுக்கு என்பதை, மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா, தேசீய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் பாரதப் பிரதமர் நேருவை முன் வைத்துக்கொண்டே வரிமலை எனக் குமுறினர். இடி விழுந்த நாகம்போல நடுங்கிப் போன 'சமாதானப் புறு'வாம் நேரு பெருமான், மறுநாள், 'திட்டம் வடநாட்டின் நலனுக்குத்தான்; ஆனால், அது தவிர்க்க முடியாதது' என்று ஒப்புக்கொண்டார்.

தனியார் துறையிலும், சென்னை மாநிலத்திலோ, தென்னாட்டில் வேறெந்த மாநிலத்திலுமோ குறிப்பிடத்தகுந்த எந்த ஒரு முன்னேற்றத்திற்காகவும் திட்டங்கள் இருக்க நியாயமில்லை. ஏனெனில், தனியார் துறைப் பிரதிநிதிகள், பிரஜைகள் அத்தனைபேரின் தாயகமும வடநாடுதான்!

இப்படி மொத்தமாக, ஏறத்தாழ 7,000 கோடி ரூபாய் வரையில் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தில், தமிழகத்திற்கு உரிய பங்கு ரூ. 170 கோடி பெறுமானது மட்டுமே!

இதுதான் இரண்டாம் திட்டத்தின் இலட்சணம். இந்தப் பிரத்யட்சமான அநியாயத்தை 'அநியாயம்' என்று கூறிடாத வர்களைத்தான் புரட்டர்— பொய்யர் — யோக்கியப் பொறுப்பற்றவர்—பிரதேச மக்களின் நலன்களைப் பிறருக்குக் காட்டிக் கொடுப்பவர் என்று உலகம் கூறுமேயன்றி, எதிர்ப்புக்கு அஞ்சாது, அநியாயத்தை 'அநியாயம்' என்று கூறுவோரைப்பார்த்து அல்ல! கோயங்கா என்ற வடநாட்டு முதலாளியின் இதழ் ஒன்று, தமிழ் மக்களின் புத்திக் கூர்மையைச் சோதிப்பதைப்போல, வடவரின் இந்தத் தெளிவான அநீதியை— கடைந்தெடுத்த அநியாயத்தை அம்பலப் படுத்தும் நம்மை, 'புரட்டர்' என்றுகூற முன் வந்தது, ஆச்சரியத்திற்குரியதல்ல! மாறாக, தமிழ் மக்களால் அனுமதிக்கப்படக் கூடாததாகும்.

'சுதேசமித்திரன்', ஆனந்த விகடன்', 'கல்கி' முதலிய பிற்போக்காளர்தம் இதழ்களே வடவரின் அக்கிரமத்தைச் சாடியிருக்கின்றன என்பதையும நினைவூட்டுகிறோம்.

மந்திரி சுப்பிரமணியம், ஒரு நேரம—உண்மையை ஒப்புவதின் மூலம், அக்கிரமத்தை இலைமறை காய்மறையாகக் கண்டிப்பதும், மறு நேரம்—'அப்படி எல்லாம ஒன்றும் தென்னாடு புறக்கணிக்கப்படவில்லை' என்று பேசுவதும, தமிழ் மக்களின் கவனத்திலிருந்து தப்பிவிட முடியாது; அவரது, 'பாலுக்கும காவல்—பூனைக்கும் தோழன்,' போக்கை தமிழர்கள் உணராமலும் இல்லை என்பதை அவர் அறிய வேண்டும்.

புதிய நாணயமுறையின் விளைவுகள்

பொதுமக்கள் குழப்பமடைய வேண்டியதில்லையாம்

புதுடில்லி, ஜூலை 3—

1957 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து புதிய தசாம்ச நாணயங்கள் புழக்கத்திற்கு வரப்பேகின்றன அல்லவா? தற்போழுது புழக்கத்திலிருந்துவரும் அணா நாணயங்களுக்குப் பதிலாக அப்போழுது நயா பைசாக்கள் (அதாவது புதிய பைசா நாணயங்கள்) எத்தனை கிடைக்கும்? இக்கேள்வியே இப்பொழுது சாதாரண மக்களின் மனத்தில் தோன்றிக்கோண்டிருக்கும்.

புதிய நாணயங்கள் புழக்கத்திற்கு வர இருப்பதை யெண்ணி பொதுமக்கள் தொல்லையடைய வேண்டியதில்லை; ஏனெனில், புதிய நாணயங்கள் புழக்கத்திற்கு வந்த பிறகுங்கூட, பழைய நாணயங்கள், குறிப்பிட்ட காலம்வரை செல்லுபடியாகும் என்றும், கூறப்படுகிறது.

புதிய நாணய முறைப்படி, 1 ரூபாய் 100 நயா பைசாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது; ஆனால், இப்பொழுது, 1 ரூபாய் 192 தம்பிடிகளாகவும், 64 காலணாக்களாகவும் பகுக்கப்பட்டிருக்கிறது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை, வரப்போகும் புதிய நாணய முறைக்கும், தற்போது உள்ள நாணய முறைக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்கும்:—

புதிய முறை	தற்போதுள்ள முறை
1 நயா பைசா	காலணா
2 நயா பைசா	½ அணா
5 நயா பைசா	1 ,,
10 நயா பைசா	2 ,,
25 நயா பைசா	4 ,,
50 நயா பைசா	8 ,,
100 நயா பைசா [ஒரு ரூபாய்]	16 ,, [1 ரூபாய்]

மேலே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள 25, 50, 100 நயா பைசாக்களுக்குச் சமமாகத் தற்போது வழங்கும் 4-அணா, 8-அணா, ஒரு ரூபாய் நாணயங்கள் முறையே சமமானவைகளாகக் கருதப்படும். ஆனால், 1, 2, 5, 10 நயா பைசாக்களுக்குச் சமமானவைகளான நாணயங்கள் தற்போது புழக்கத்தில் இருக்கும் நாணயங்களில் இல்லை.

ஆனால் மேற்கண்ட நாணயங்கள் தற்போதுள்ள காலணா, ½-அணா, 1-அணா 2-அணா நாணயங்களுக்குப் பதில முறையே வழங்கி வரும்.

1957 ஏப்ரல் முதல் தேதியில் எல்லாப் புதிய நாணயங்களும் புழக்கத்திற்கு விடப்படமாட்டா. முதலில் 1, 2, 5, 10 நயா பைசாக்கள் மட்டும் புழக்கத்திற்கு விடப்படும். மற்ற புதிய நாணயங்களான 25, 50 நயா பைசாக்களும், ஒரு ரூபாயும் (100 நயா பைசாக்கள்) கொஞ்ச நாட்கள் கழித்து புழக்கத்திற்கு விடப்படும்.

புதிய நாணயங்கள் புழக்கத்திற்கு வெளியேற, வெளியேறத் தற்போது உள்ள நாணயங்கள் திருப்பிப் பெற்றுக்கொளளப்படும். மூன்று ஆண்டு காலத்தில் இவ் வேலை நடந்தேறும். இந்த இடைக் காலத்தில், ஒரு பழைய நாணயத்தைக் கொடுத்தால் எவ்வளவு புதிய நாணயங்களைப் பெற்றுக்கொள்ளலாம என்பதையும், பழைய, புதிய நாணயங்களுக்கு உள்ள தொடர்பையும் பற்றி மிகத் தெளிவாக மக்கள் தெரிந்து கொள்ளுவது அவசியமாகும்.

மக்கள் இந்தப் புதிய நாணய முறைகளைத் தெரிந்து கொள்ள நிதி அமைச்சுத் துறையானது கைவசம் வைத்துக்கொள்ளக் கூடிய இரண்டு வகை மதிப்பீடு அட்டவணைகளை, பணம் கொடுக்கல், வாங்கல் நடக்கும் எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யும்.

இந்த அட்டவணைகளில் ஒரு ஒரு ரூபாய் வரை, பழைய புதிய நாணயங்களிடையே உள்ள பரிவர்த்தனை விகிதம் கொடுக்கப்படும்.

ஒரு ரூபாயும் அதற்கு மேற்பட்ட நாணயங்களுக்கும் பரிவர்த்தனை விகிதம் தேவையில்லை; ஏனென்றால், புதிய ஒரு ரூபாய் நாணயத்திற்கும், தற்போது புழக்கத்தில் உள்ள ஒரு ரூபாய் நாணயத்திற்கும் உள்ள மதிப்பு சமமானதாகும்.

1957 ஏப்ரல் முதல் தேதி முதல் பாங்கிகளில் பரிவர்த்தனை செய்ய 'மதிப்பீடு அட்டவணை-1' உபயோகிக்கப்படும்.

பொதுமக்களுக்கு உபயோகப்படும் அட்டவணை 'மதிப்பீடு அட்டவணை-2' ஆகும்; இது, எளிதாகப் புரியக்கூடிய அட்டவணையாகும்.

இந்த எளிதாகப் புரியக்கூடிய அட்டவணையில் அணாக்களையும், காலணாக்களையும் பரிவர்த்தனை செய்துகொள்ளும் முறை மட்டும் விளக்கப்படும். [3,6,9 சல்லிகள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும்] ஒற்றைச் சல்லி காசுகளைப் பற்றி அவ்வட்டவணையில் எதுவும் குறிப்பிடப்படாது; ஏனென்றால், கொடுக்கல் வாங்கலில் சல்லிக் காசுகள் செலாவணியில் இலலாததே காரணமாகும்.

விற்பனை வரி விதிப்பு

விகிதம் அதிகரித்ததை எதிர்த்து நடவடிக்கை

உ. பி. எங்கும் 'அர்த்தால்'

லக்னோ, ஜூலை 2—

கடந்த ஏப்ரல் முதல் விற்பனை வரி விகிதத்தை மாநில சர்க்கார் உயர்த்தியிருப்பதை எதிர்த்து உத்திரப் பிரதேசத்தில் உள்ள எல்லா முக்கிய வர்த்தக இடங்களில் எல்லாம், 'அர்த்தால்' மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

நடைபெற்ற பொதுக்கூட்டங்களில், சர்க்கார் வரி விகிதத்தை உயர்த்தியதைக் கண்டித்துப் பலர் பேசியிருக்கின்றனர்; ஊர்வலங்களும், கருப்புக்கொடி ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றுள்ளன; காங்கிரசல்லாத ஏனைய கட்சிப் பிரதிநிதிகள் பலரும் இந்த எதிர்ப்பு இயக்கத்தில் பங்கு பெற்றிருக்கின்றனர்.

பொது மக்களின் நன்மை கருதி சர்க்கார் உடனடியாக இந்த புதிய விகிதங்களை மாற்றவேண்டுமென லக்னோவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பிரிட்டன் நடத்திய அணுகுண்டு சோதனை

கல்கத்தா, ஜூலை 2—

'ஆஸ்திரேலியத் தீவானமாண்டி பெல்லோவில், அண்மையில் பிரிட்டன் நடத்திய அணுகுண்டு பரிசோதனையின் விளைவாக வெளிப்படும் கதிரியக்கத் தூள்கள் கல்கத்தாவை பாதிக்கமாட்டா' என்று பரிசோதனை நடத்திய எ. இ. ஆடம்ஸ் இங்கு கூறியிருக்கிறார்.

இந்தப் பரிசோதனையினால் மனிதர் எவருக்கும் ஆபத்து ஏதும் ஏற்படாதவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்றும், அவர் கூறியதாகத் தெரியவருகிறது.

வேலை தேடித் தரும் நிறுவனங்கள்

நிர்வாகம் கைமாறுகிறது

சென்னை, ஜூலை 2—

வேலை தேடித்தரும் 'எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்' நிறுவனம், இப்போது சென்னை சர்க்காரைக்கு மாற்றப்படுவதற்கான உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாம்.

இந்த நிறுவனத்தை நிர்வகிக்கும் செலவில் 60 சதவிகிதத்தை டில்லி சர்க்காரும், 40 சதவிகிதத்தை மாநில சர்க்காரும் ஏற்பதாகவும், நிர்வாகம் சென்னை சர்க்காரைக்கு மாறிய பின்னும் இது நீடிக்கும் என்றும் நிதிமந்திரி தகவல தந்திருககிறார்.

சீர்திருத்தங்களுக்கு அடிப்படை

கல்விச் சீர்திருத்தம்

புதுக்கோட்டை, ஜூலை 1—

"சமூகத்தில சீர்திருத்தம காணா விட்டால் கல்வியில சீர்திருத்தம் காண முடியாது; ஆகவே, சமூகத்தைச சீர்திருத்த முதலில் கவனம் செலுத்தி, பிறகு கல்விச் சீர்திருத்தம் காணவேண்டும்,"

என்று, மத்திய அரசாங்க வெளிநாட்டிலாகாவின் பாராளு மன்ற செயலாளர் திருமதி இலட்சுமி மேனன் புதுக்கோட்டை மன்னா கல்லூரி புதுமண்டபத்தில், சுழற் குழுவின் ஆதரவில் பேசுகையில குறிப்பிட்டுள்ளார்.

"நமது முக்கியமான குறிக்கோள் சமூகத்தைச் சீர்திருத்துவதாகும. இன்றைய அரசியல, சமூகத்தைச் சீர்திருத்தும் வழியில்லை கல்வியிலே சீர்திருத்தம காண

(4-ம் பக்கம பார்க்க)

சிட்னி மருத்துவமனையில் ஒரு அற்புதம்!

பேனாகத்தி கொண்டு இருதயத்தில் இரண சிகிச்சை

சிடனி, ஜூலை 2—

ஒரு சிறிய பேனாகத்தியைக் கொண்டு, இருதய இரண சிகிச்சையை நடத்துவது என்பது எண்ணிப்பார்க்கவே முடியாத அற்புதம்! அந்த அற்புதம் இங்கே நிகழ்ந்திருககிறது.

ஈரல் ஒன்றை அகற்றுவதற்காக 10 நாட்களுக்கு முன் 25 வயதுப் பெண் ஒருவருக்கு இரண சிகிச்சை அளிக்கப்பட்டது.

பத்து நாட்களுக்குப் பிறகு அந்த அம்மையாருககு, அறுவை வைத்தியம் செய்யப்பட்ட இடத்திலிருந்து ஒருவகை நீர வழிய ஆரம்பித்து, மூச்சு விடுவதே கடினமாகி விட்டது.

வேலையிலிருந்த தாதியர், அருகிலிருந்த வாடியிலிருந்து ஒரு இருதய நிபுணரான டாக்டரை அழைத்து வந்தனா; அவர் அந்த அம்மையாரைப் பரிசோதித்தபோது இருதயத் துடிப்பு நின்று போயிருந்தது.

இரண சிகிச்சைக்கான முறையான ஆயுதங்கள் எடுத்துவரப்படும் வரை காத்திராமல், அந்த டாக்டர் தன்னிடமிருந்த பேனாகத்தி கொண்டு, மார்பில் தைக்கப்பட்டிருந்த இடத்தில் அறுத்து, தையலை அவிழ்த்து, இருதயத் துடிப்பு மீண்டும் ஏற்படும்வகையில் சரி செய்திருக்கிறா.

பல நிமிடங்களுக்குப் பிறகு, இருதயம் மீணடும துடிக்க ஆரம்பித்திருககிறது.

சிடனி ராயல் வடகரை மருத்துவ மனையில நடைபெற்ற இந்த அற்புதத்தை, டாக்டர்கள், 'இரண சிகிச்சையில் குறிப்பிடத்தகுந்த ஒரு நிகழ்ச்சி' என்று வருணிக்கின்றனராம!

இந்தச் சிகிச்சை பெற்ற பெண்மணி, இன்னும் ஆபத்தான நோயாளிகள் பட்டியலில் இருந்தாலும், தேறிவருவதாகக் கூறப்படுகிறது.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் சுற்றுப்பயணம்

மாநில மாநாட்டின் முடிவுகள் குறித்து விளக்கம்

தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் 26—6—56 முதல் 30—6—56 வரை கீழ்க்கண்ட ஊர்களில் சுற்றுப்பயணம் செய்து, மாநில மாநாட்டின் முடிவுகளை விளக்கிப் பேசியதோடு, கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டங்களிலும் கலந்துகொண்டு கழகத்தை மேலும் கட்டுப்பாடாக இயங்கச் செய்ய வேண்டியதைக் குறித்தும் மாவட்டக் கழகத்துடன் ஒத்துழைத்தும், தலைமைக் கழகம் அவ்வப்போது விடும் வேண்டுகோளை நிறைவேற்றுமாறும் கேட்டுக்கொண்டார்.

பொதுக்கூட்டங்களில் கிளைகளின் சார்பாக, துணைப் பொதுச் செயலாளருக்கு கைத்தறி ஆடைகளும் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

கொப்பம்பட்டி :

26—6—56 மாலை 5 மணிக்குத் துறையூர் அடுத்த கொப்பம்பட்டியில் தி மு கழகக் கொடியைத் துணைப் பொதுச்செயலாளர் என் வி நடராசன் ஏற்றிவைத்தார்.

அடுத்து, நாவலர் நெடுஞ்செழியனார் படிப்பகத்திற்குச் சென்று பார்வையிட்டார்.

துணைப் பொதுச்செயலாளருடன் திருச்சி மாவட்ட தி மு கழகச் செயலாளர் அம்பில்-தர்மலிங்கம், பொதுக்குழு உறுப்பினர் துறையூர் அழகமுத்து ஆகியோரும் வந்திருந்தனர்.

முருங்கப்பட்டி:

26—6—56 இரவு 7 மணிக்கு, முருங்கப்பட்டி தி. மு. கழகத் துவக்க விழா மாரியம்மன் கோயில் திடலில், தோழர் டி பி. அழகமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஏராளமான பொது மக்கள் கலந்துகொண்டனர் ஊரெங்கும் வளைவுகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. துவக்கத்தில் தம்பம்பட்டி பெரியசாமி (குண்டடிபட்டவர்) நாகைநல்லூர்-கோவிந்தன் அம்பில்-தர்மலிங்கம் ஆகியோர் பேசினர்.

இறுதியாக, என். வி. நடராசன் அவர்கள் மாநில மாநாட்டின் முடிவுகளை விளக்கியும், தமிழ் நாட்டிற்கு உரித்தான பகுதிகளைத் தமிழகத்துடன் சேர்க்கும் பிரச்சினையில் காங்கிரஸ்காரர்களும், காங்கிரஸ் அமைச்சர்களும் செய்த துரோகத்தை விவரித்தும், அடுத்து வரும் பொதுத் தேர்தலில் இவர்களுக்கு வாக்காளர்கள் தக்க பாடம் கற்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

உளுந்தூர்பேட்டை :

27—6—56 காலை 10 மணிக்கு உளுந்தூர்பேட்டையில், தி. மு கழகத் தோழரும், பிரமுகருமான சு. சண்முகம் அவர்களின் பெருமுயற்சியால் திறவப்பட்ட சுப்புராய (செட்டியார்) மக்கட் பேறில்லத் துவக்க விழாவில், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் கலந்துகொண்டார். தோழர் சு சண்முகம் அவர்களின் பணியைப் பாராட்டினார் இந்தத் துவக்க விழா தோழர் கே எ பி விசுவநாதம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது மாவட்டக் கலெக்டர் மக்கட்பேறில்லத்தைத் திறந்து வைத்தார். மற்றும் தோழர்கள் ஏ கோவிந்தசாமி எம். எல். ஏ, கந்தசாமி (படையாச்சி) எம்.எல் ஏ உள்ளிட்ட பலர் சொற்பொழிவாற்றினர். தோழர் சு. சண்முகம் அனைவருக்கும் நன்றி கூறினார்.

சோழபாண்டியபுரம் :

தெ. ஆ மாவட்டம் சோழபாண்டியபுரம் தி மு. கழகத் துவக்க விழாக் கூட்டம் 28—6—56 காலை 9 மணிக்கு துவக்கப்பள்ளி அருகிலுள்ள திடலில் நடைபெற்றது

தேவபாண்டலம் டி. பி. கேசவன் தலைமை வகித்தார். பொதுக்குழு உறுப்பினர் தோழர் ந. நாச்சியப்பன் சிறிது நேரம் பேசியபின் துணைப் பொதுச்செயலாளர் என் வி. நடராசன் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், கிராம மக்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் காங்கிரஸ் சர்க்கார் செய்துவரும் கொடுமைகளையும் எடுத்துக்காட்டிப் பேசினார். செயலாளர் தோழர் ந பெரியசாமி நன்றி கூறினார்.

காலை 7 மணிக்கு கிளைக் கழகச் செயற்குழு தேர்தல் கூட்டம் ந நாச்சியப்பன் தலைமையில் நடைபெற்றது. துணைப் பொதுச்செயலாளர் அக்கூட்டத்தில் கலந்துகொண்டு, நிர்வாகிகளின் கடமைகளை விளக்கி வேண்டுகோள் விடுத்தார்.

அரசம்பட்டு :

28—6—56 மாலை 6 மணிக்கு, அரசம்பட்டு தி. மு. கழகத் துவக்க விழா, கடைவீதி அடுத்த திடலில் நடைபெற்றது உள்ளூரிலிருந்தும் சுற்றுப்புறங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர் தோழர் கே. எல். முனியப்பன் தலைமை வகித்தார். தோழர் நா நாச்சியப்பன் சமுதாயத்தில் மலிந்துள்ள இழிவுகளைக் குறித்துப் பேசினார்.

பின்னர் துணைப் பொதுச்செயலாளர் என் வி நடராசன் அவர்கள், தேர்தல் சமயங்களில் காங்கிரசார் கூறிய வாக்குறுதிகளையும், ஆட்சி பீடமேறிய பிறகு அதற்கு நேர்விரோதமாக நடந்துவரும் அட்டூழியங்களையும் விளக்கிப் பேசியதோடு, அடுத்துவரும் தேர்தலில் இவ்வித ஆட்சிமுறையை அகற்ற வாக்காளர்கள் தயாராகயிருக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

சோழம்பட்டு :

29—6—56 காலை, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், பொதுக்குழு உறுப்பினர் நாச்சியப்பன், மற்றும் சங்கராபுரம் கிளைக் கழக நிர்வாகிகளுடன் சோழம்பட்டு வந்து சேர்ந்தார்.

காலை 8 மணிக்கு அவ்வூரில் நடைபெற்ற தோழர் முனியப்பன்—வள்ளியம்மை திருமணத்திற்குத் தலைமை தாங்கி இனிது முடித்து வைத்தார்.

அன்று பிற்பகல் 2 மணிக்குத் தோழர் ம. முனுசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற சோழம்பட்டு தி. மு கழக அமைப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு கழகத் தோழர்களின் கடமைகளை விளக்கினார்.

மாலை 5 மணிக்கு கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம், உள்ளூர் கழகப் பொருளாளர் கே. நாச்சியப்பன் தலைமையில் நடைபெற்றது. துவக்கத்தில் தோழர்கள் டி. பி கேசவன், இரெ. வாசு, ந. நாச்சியப்பன் ஆகியோர் பேசிய பின், துணைப் பொதுச்செயலாளர் என். வி நடராசன் அவர்கள் மாநில மாநாட்டின் முடிவுகளை விளக்கியும், இன்று ஆட்சிபீடத்திலுள்ளவர்கள் ஏழை, நடுத்தர மக்களுக்கு இழைத்துவரும் இன்னல்களை ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டியும் சர்க்கார் ஊழியர்கள் சம்பளம், பஞ்சப்படி பிரச்சினையில் ஆட்சியாளர் காட்டி வரும் பிற்போக்குத் தன்மையையும், வடநாட்டுச் சுரண்டல் தன்மையால் திராவிடம் எல்லாத் துறையிலும் சீரழிக்கப்பட்டு வருவதையும் விவரித்துப்பேசினார். செயலாளர் பெ. கண்ணு நன்றி கூறினார். கூட்டம் துவக்கப்படுவதற்கு முன்னதாக ஊர்வலமும் நடந்தேறியது.

இக்கூட்டத்தில் தேர்தல் நிதிக்காக சங்கராபுரம் தி. மு. கழகக் கிளை ரூ. 1-ம், சோழம்பட்டு தி. மு. கழகக் கிளையின் சார்பில் ரூ. 2-ம் ஆக ரூ 3-ம் துணைப் பொதுச்செயலாளரிடம் அளிக்கப்பட்டது.

உலகுடையாம்பட்டு :

30—6—56 மாலை 5 மணிக்கு தி மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் எஸ். இராசகோபால் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் தேவபாண்டலம் டி. பி. கேசவன், ந. நாச்சியப்பன் ஆகியோர் பேசிய பின், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் கழகக் கொள்கைகளை விளக்கியும், காங்கிரஸ் ஆட்சியில் விளைவிக்கப்பட்டுள்ள கேடுகளையும் விவரித்தும் பேசினார்.

தேர்தல் நிதிக்காக வடசிறுவளூர் தி. மு. கழகம், உலகுடையாம்பட்டு தி. மு. கழகச் சார்பில் முறையே ஒவ்வொரு ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

கழகச் செய்திகள்

திருமழிசை தி. மு. கழக 3-வது ஆண்டு விழா

அண்ணா, என் வி. நடராசன் கலந்துகொண்டனர்

பூவிருந்தவல்லி அடுத்த திருமழிசை தி மு கழக மூன்றாவது ஆண்டு விழா 1—7—56 மாலை நடைபெற்றது. சுற்றுப்பக்கங்களிலுள்ள கிராமங்களிலிருந்தெல்லாம் ஏராளமான பொதுமக்களும், நெசவுத் தொழிலாளர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

திருமழிசையின் எல்லா வீதிகளும் வளைவுகள், தோரணங்கள், கொடிகள் ஆகியவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

திருமழிசை கோயிலுக்கடுத்த திடலில் அமைக்கப்பட்டிருந்த ஆண்டு விழா மேடையும், ஒலி, ஒளி முதலிய அமைப்புகளும் பாராட்டத்தக்கதாய் அமைந்திருந்தன.

ஆண்டு விழாக் கூட்டம் மாலை 6-30 மணிக்குத் துவக்கப்பட்டது தோழர் டி. கே. போரூரான் தலைமை வகித்து அண்ணா அவர்களையும், மற்றும் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

அடுத்து தோழர்கள் டி. சண்முகம், எம். எல் ஏ., அலமேலு அப்பாதுரை, சி. வி. எம். அண்ணாமலை, சி. வி. இராசகோபால் ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகள், இன்று பெரும்பாலான மக்களால் வரவேற்கப்படுவதை விவரித்துப் பேசினர்.

பின்னர், துணைப் பொதுச்செயலாளர் என் வி. நடராசன் அவர்கள் பேசுகையில், நெசவுத் தொழிலாளர்களின் வாழ்வுக்காக கழகம் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியையும், காங்கிரஸ் ஆட்சியில் தொழிலாளர்களும், ஏழை-நடுத்தர மக்களும், கடல் கடந்து சென்றுள்ள திராவிடர்கள் படும் தொல்லைகளையும், காங்கிரஸ்காரர்கள் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளுக்கு நேர்மாறாக நடந்துவரும் அநீதிகளையும் குறிப்பிட்டு, இப்பகுதியிலுள்ள கழகக் கிளைகளும், கழகத் தோழர்களும் மேலும் ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டார்.

இறுதியாக அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுகையில், திராவிட நாட்டுப் பிரிவினையை விளக்கியும், அதனை திராவிட முன்னேற்றக் கழகம் அடைந்தே தீரும் என்றும், ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு சீரழிக்கப்பட்டுவரும் விவரங்களை எடுத்துக்காட்டியும், இலங்கைத் திராவிடர்கள் சகிக்க முடியாத கொடுமைகளுக்கு ஆளாகி வரும் இன்றுகூட சென்னை சர்க்கார் வாய்திறந்து கண்டிக்க முன்வரவில்லையென்பதுடன், இந்தியப் பிரதமர் இலண்டனில், இதே சமயத்தில் இலங்கைப் பிரதமருடன் விருந்துண்டுக்கொண்டு, மற்ற நாட்டு நெருக்கடிகளைப் பற்றிப் பேசிவரும் விசித்திர நிலையையும், மாநில மாநாட்டின் முடிவுகளை விவரித்தும் சொற்பொழிவாற்றினார்கள்.

அண்ணா அவர்களுக்கும், மற்ற தோழர்களுக்கும் பல கிளைகளின் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன; பிரத்தியேகமாகத் தயாரித்த பெரிய மாலை ஒன்றும் அண்ணா அவர்களுக்கு அணிவிக்கப்பட்டது.

கோவிலூர் தி. மு. கழகத் துவக்க விழா

29—6—56 இரவு 7½ மணியளவில் அலங்காநல்லூரை அடுத்த கோவிலூரில், தி. மு. கழகத் துவக்க விழா தோழர் மதுரை எஸ். முத்து தலைமையில் நடைபெற்றது. எஸ். எஸ் இராசேந்திரன் கழகக் கொடியை ஏற்றிவைத்துப் பேசினார் தோழர் அ இராசன் நன்றி நவின்றார்.

கருங்கடல் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

17—6—56 இரவு 8 மணியளவில், கருங்கடல் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் சா. தேவராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். எஸ். இராசாமணி, ஏசடியான், பி. சண்முகம், எஸ் டி. அமிர்தம், கே. சேர்மத்துரை, சேக்தாவுது, கே. குப்புசாமி ஆகியோர் பேசினர். இராசாமணி நன்றி நவின்றார்.

மணக்குடி தி. மு. கழகத் துவக்க விழா

22—6—56ல், தோழர் ஆ. காசிநாதன் தலைமையில், மணக்குடி கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் தலைகாயர்-இசாக், நாகை-பாண்டியன், தோழியர் சத்தியவாணி முத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருமணங்கள்

18—6—56 காலை 9 மணியளவில், மதுரை மாவட்டம் கொட்டாரத்தில், தோழர் எஸ். முத்து தலைமையில், தோழர் இரா. இலட்சுமணன்—தோழியர் விசயலட்சுமி வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர்கள் எஸ் கந்தசாமி, ஆர். வி. அனந்தகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினர். பல பரிசுகளும், வாழ்த்து இதழ்களும் பல நிறுவனங்களாலும், தி. மு. கழகம், பாரதிதாசன் படிப்பகங்களாலும் வழங்கப்பட்டன இதன் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு அன்பளிப்பாக ரூ. 1 தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

17—6—56 பகல் 12 மணியளவில் கருங்கடல் கிராமத்திலுள்ள புளியங்குளத்தில் தோழர் பி. சண்முகம்—தோழியர் எஸ்தர் திருமணம் எஸ். எஸ். இராசாமணி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

29—6—56 காலை 9 மணியளவில், கரூரில், தோழர் எம். கே. மல்லன் — தோழியர் பாப்பா வாழ்க்கை ஒப்பந்தம், தோழர் எம். கே. கரிகாலன் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் எஸ். எஸ். முத்துசாமி, மாரிமுத்து, கே. அன்பரசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

[அன்பளிப்புத் தொகைகள் வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.]

செய்திச் சுருள்

★

காவியக் கலை அரங்கம் நாடகத் துவக்க விழா

1-7-56 மாலை 4-15 மணிக்கு 'மலர்' இதழ் அலுவலகத்தில், காவியக் கலை அரங்கத்தின் 'சிறைக் கோட்டம்' நாடகத் துவக்க விழா தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அரங்கத்தின் நோக்கத்தையும் நாடக விளக்கத்தைப்பற்றியும் தோழர்கள் வே. கபிலன், இராமன், என் வி. மதிவண்ணன், தி.க. மதிவாணன், டி. பி. எஸ். மணி ஆகியோர் பேசினர். பின்னர் நாடகத்தின் சில முக்கிய காட்சிகளை நாடக ஆசிரியர் திரு. கபிலன் அவர்கள் படித்துக் காண்பித்த பின், தலைவர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்கள் நாடக நடிகர்களுக்கான பாத்திரங்களை வழங்கி முடிவுரையாற்றினார். விழாவுக்கு வந்திருந்த அனைவருக்கும் தேனீர் விருந்தளிக்கப்பட்டது.

கொழும்பு இலக்கியமன்றம்

27—6—56 மாலை, மேற்படி மன்றப் பணிமனையில் தோழர் எம். முத்தையா தலைமையில் நடைபெற்றச் செயற்குழுக் கூட்டத்தில், திருவள்ளுவர் விழாவை ஜூலை 29-ல் கொண்டாடுவதென்றும், ஒவ்வொரு வாரமும் சனி இரவு 7 மணி முதல் 9 மணிவரை சொற்பயிற்சி நடத்துவதென்றும், சொற்பயிற்சி செயலாளராகத் தோழர் இரா. கிருட்டிணனைத் தேர்ந்தெடுத்தும் முடிவுகள் செய்யப்பட்டன.

முத்துப்பேட்டை அண்ணா சொற்பயிற்சி மன்றம்

1—7—56ல், முத்துப்பேட்டை 'சந்திரா போட்டோ ஸ்டுடியோ'வில் தோழர் ஜி. சீனுவாசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—தலைவர்: இரா. நடராசன்; செயலாளர்: க. தருமலிங்கம்; துணைச் செயலாளர்: ஜி. சீனுவாசன்; பொருளாளர்: ஆர். தெட்சணாமூர்த்தி.

பலகட்ட முறை விற்பனை வரி எதிர்ப்பு

கடையடைப்பும் கூட்டங்களும்

தமிழ் நாடு வர்த்தகக் கழகச் சார்பில் நடைபெறும், பலகட்ட முறை விற்பனை எதிர்ப்பு 3-வது மாநில மாநாட்டின் சார்பாக திருவாளர்கள் கேசவலால் காளிதாஸ் (சேட்), கே கிருஷ்ணமூர்த்தி, வி. எஸ். விசுவநாதம் ஆகியோர் ஜுன் 30, ஜூலை 1 தேதிகளில் திருவத்திபுரம், ஆரணி, திருப்பத்தூர், ஜோலார்பேட்டை ஆகிய ஊர்களில் நடைபெற்ற வியாபாரிகளின் கூட்டங்களில் மாநாட்டு இலட்சியம் குறித்து பேசினர். வியாபாரிகளும் கடையடைப்புச் செய்து கூட்டங்களில் கலந்துகொண்டனர்.

நாமக்கல் - பெருமாள்

29—6—56-ல், நாமக்கல்லில் நடைபெற்ற நாமக்கல் 'கோவாப ரேடிவ் ஸ்டோர்ஸ்' டைரெக்டர்கள் கூட்டத்தில், தோழர் நாமக்கல் பெருமாள் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிறப்பு

2—7—55-ல், வடசென்னை தோழர் எம். துரைசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியும்—வண்ணை கே. எஸ் பாண்டியனார் குமாரத்தியுமான தோழியர் இராசேசுவரி அவர்கள், ஓர் பெண் மகவுக்குத் தாயானார்; தாயும் சேயும் நலம் இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

உலகப் போருக்குப் பின் சுதந்திரம் பெற்ற முதலாவது ஆசிய நாடு

பத்து இலட்சம் மக்களைப் பலியிட்ட பின்னரும் மனந்தளராத மாண்பு

இன்று பத்தாண்டு விழாவைக் கொண்டாடுகின்றனர்

மணிலா, ஜூலை 4—

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின், சுதந்திரம பெற்ற புதிய ஆசிய நாடுகளில் முதலாவதாகிய பிலிப்பைன் வரலாற்றில், இன்று பத்து ஆண்டுகள் நிறைவுறுகிறது; ஐந்து நாட்களாகக் கோண்டாட்டங்கள் நடைபெற்று இன்று முடிவுறுகிறது. அமெரிக்காவுடன் ஏற்பட்ட ஓர் உடன்படிக்கையின்படி, 1946 ஜூலை 4-ல், பிலிப்பைன் குடியரசு ஆரம்பமாயிற்று.

தலைநகரம் அழிந்து கிடந்தது; தொழில் பாழடைந்திருந்தது; வளம் பொருந்திய வயல்களில் களை மண்டிப் படர்ந்திருந்தது; இலட்சோப லட்சம் மக்கள் பட்டினியால் வாடினர்; பத்து இலட்சத்துக்கு மேற்பட்டோர் இறந்துபட்டிருந்தனர்; இந்நிலையில் பிலிப்பைன் மக்கள் தங்கள் புதிய நாட்டை உருவாக்க முனைந்தனர்.

இன்று, மணிலா, ஒரு புதிய நகரம் போலவே தோற்றம் அளிக்கிறது; ஒவ்வொரு அம்சத்திலும் நவநாகரீகமானதாக விளங்குகிறது. நாட்டின் தொழில் உற்பத்தியும், விவசாய உற்பத்தியும் போருக்கு முந்தியிருந்த நிலையிலும் அதிகம் உயர்ந்துள்ளன; ஒவ்வொரு மாதமும் மேலும் உயர்ந்துவருகின்றன; பண மதிப்பிலும், உற்பத்தி அளவிலும் இது உண்மை.

ஆயினும், இந்த முன்னேற்றம் எளிதில் ஏற்பட்டதல்ல. சுதந்திரம் பெற்ற உடனே, அரசாங்கத்தைக் கைப்பற்றுவதற்குக் கம்யூனிஸ்டுகள், கடுமையாக முயற்சி செய்தனர். முதலில் அது சட்டசபை ஆதிக்கத்தைப் பெறும் இயக்கமாக இருந்தது; இம்முயற்சி தோல்வியுறவே, அவர்கள் நேர்முகமாகப் போர் புரியலாயினர்; ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளுக்கு அக்குடியரசின் பெரியதும், மக்கள் தொகை அதிக அளவில் உள்ளதுமான லூசான் தீவில் கடுமையான கொரில்லாச் சண்டை நடந்தது.

இன்று அந்தக் கம்யூனிஸ்டுகள் படுதோல்வியடைந்து விட்டனர்; விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரே இன்னும் மலைகளில் மறைந்து திரிகின்றனர். ஒரு காலத்தில் கம்யூனிஸ்டுகளாக இருந்தவர்களில் பலர் சரணடைந்து பிலிப்பைன் அரசாங்கத்தின் ஆதரவில் புதிய வாழ்க்கைத் தொடங்கியிருக்கின்றனர். நாட்டில் புதிதாய் அபிவிருத்தியடையும் பிரதேசங்களில் அவர்களுக்கு நிலங்களும், பண்ணைகளும் கொடுக்கப்பட்டுள்ளன; இன்று அவர்கள் குடியரசுக்கு நாணயமுள்ள குடிமக்களாகப் பெருமையுடன் வாழ்ந்து தங்கள் நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவுகிறார்கள்.

எப்போதும் விவசாய ஏற்றுமதி நாடாக இருந்த பிலிப்பைன், போரின் இறுதியில் தனது விவசாயம் அழிந்துபட்டிருப்பதைக் கண்டது; ஆயினும், மக்களின் கடுமையான உழைப்பினால், நாட்டின் விவசாயம் தழைத்தோங்கியுள்ளது; 1957-நாட்டின் வரலாற்றிலேயே சிறந்த ஆண்டாகத் திகழும் என்று சொல்லப்படுகிறது.

பிலிப்பைன் சுதந்திரம் அடைந்தவுடனே ஐ. நா.-வில் அது தன் இடத்தை அடைந்தது; சுதந்திர மக்களின் கொள்கைகளுக்காகப் போராடவும், அவற்றைப் பாதுகாக்கவும், முதிர்ச்சியும் உறுதியும் காட்டியுள்ளது.

நம்பிக்கையோடும் உறுதியோடும் பிலிப்பைன் சுதந்திரத்தின் இரண்டாவது பத்தாண்டுக் காலத்தைத் தொடங்குகிறது; ஆயினும், இந்த ஆண்டுகள் கஷ்டமில்லாமல் செல்லும் என்னும் கனவொன்றும் பிலிப்பைன் மக்களுக்கில்லை. சிறு நாடுகளை உறுத்து நோக்கும் அபாயங்களை அவர்கள் நன்கு அறிவார்கள்.

சீர்திருத்தங்களுக்கு......

(2-ம் பக்கத்தில் தொடர்ச்சி)

வேண்டும். மேற்குறித்த சீர்திருத்தங்கள் வெறும் சட்டங்கள் இயற்றுவதால் மட்டும் முடியாது. பொதுமக்கள் ஆதரவு இருந்தால் தான் இயற்றப்பட்ட சட்டம் வெற்றிபெற முடியும்.

"இன்றைய மாதர் இயக்கங்கள் சமூகத்திலே கவனம் செலுத்த வேண்டும்; இயக்கங்களின் வெற்றி வெறும் விளம்பரங்களினால் மட்டும் ஆகிவிடாது; பெண்களின் முன்னேற்றம் குறித்து அனேகமாக காங்கிரசுக்காரர்கள்தான் அதிகம் பேசுகிறார்கள்; ஆனால், இது மேடையளவில் இருக்கிறதே தவிர, செயலில் இல்லை," என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாஞ்சில் மாவட்ட தி. மு. க. பொதுக்குழு

"6-7-1956 மாலை 4-மணிக்கு வடசேரி தி. மு. க. அலுவலகத்தில், நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகப் பொதுக்குழு நடைபெறும். அதுபோது, 'மணிமகுடம்', 'புதுவெள்ளம்' நாடகங்களின் வரவு — செலவும், 4—11—1955-லிருந்து 6—7—1956 வரையுள்ள நா. மா. தி. மு. க. வரவு—செலவு இனங்களும் பரிசீலனை செய்யப்படும்,"

என்று, நாஞ்சில் மாவட்ட தி. மு. க. செயலாளர் வி. எம். ஜான் அவர்கள் அறிவிக்கிறார்.

சென்னை 27-வது வட்ட தி. மு. க. தோழர்களுக்கு:

26—6—56 முதல் சென்னை, 27-வது வட்டம், பிள்ளையார் கோவில் தெரு. எண்-15 இல்லத்தில், திராவிட முன்னேற்றக் கழகம், 27-வது வட்டக் கிளையின் பணிமனை அமைக்கப்பட்டுள்ளது.

மு. கருணாநிதி

நிகழ்ச்சிகள்

ஜூலை 8 : அம்மாப்பேட்டை
" 15 : சென்னை (கடற்கரைக் கூட்டம்)
" 16 : கல்லக்குடி
" 22 : சென்னை —மீர்சாகிப்பேட்டை

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

சுற்றுப்பயணம்

ஜூலை 14 : அரியலூர்
" 15 : காலை சென்னை (திருமணம்)
" " மாலை வேலூர் (வ. ஆ)
" 22 : மாயவரம்
" 29 : வட சென்னை

'ஏழை எளியோர் இடம் பெறும்வரை கூட்டுறவு இயக்கம் வெற்றி பெருது'

முதல்திட்டம் இத்துறையில் வெற்றிபெறவில்லை

மந்திரிகள் மாநாட்டில் கருத்துரைகள்

முசோரி, ஜூலை 2—

"உயர்ந்தோருக்கும்—தாழ்ந்தோருக்கும் இடையே உள்ள ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்பட்டாலன்றி, இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் வெற்றி பெறுவதற்கில்லை.

"எவருக்கு இந்த இயக்கம் தேவையோ அவர்கள்—மிகப் பெரும் பெரும்பான்மையினரான அவர்கள், இந்த இயக்கத்தின் அமைப்பில் இல்லாதவரை, சமுதாய நலத் திட்டப் பிரதேசங்களில் கூட்டுறவு இயக்கத்திற்காக ஏதும் செய்வதற்கு இல்லை,"

என்று, சமுதாய நலத் திட்ட நிர்வாகியான எஸ். கே டே. என்பார் குறிப்பிட்டிருக்கிறார்.

"சர்க்கார் என்னதான் வசதிகள் அளித்தாலும் அவற்றை சமுதாயத்தில் செல்வாக்கற்றிருப்போர் பயன்படுத்திக்கொள்ள முடிவதில்லை,"

என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மாநில கூட்டுறவு இலாகா மந்திரிகளின் மாநாட்டில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அந்த மாநாட்டில் பேசிய மத்திய திட்ட மந்திரி குல்சாரி நந்தா குறிப்பிட்டதாவது :—

"கூட்டுறவு இயக்கம் அபிவிருத்தி அடைந்தாலன்றி, ஒரு க்ஷேமல சர்க்கார் அமைப்பது இயலாததாகும்.

"நமது எதிர்கால சமுதாய பொருளாதார அமைப்பின் அவசியமான அடிப்படையே கூட்டுறவு முறைதான்.

"முதல் திட்டம் கூட்டுறவுத் துறை பற்றி அதிக அக்கறை செலுத்தியதுண்டு; ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில், முன்னேற்றம் கண்டதாகக் கூறுவதற்கில்லை. இரண்டாம் திட்டம் கூட்டுறவுத் துறையை ஒரு கொள்கையாகக் கொண்டதாகும்."

திருமணம்

6—7—56 காலை 9-30 மணியளவில், சிலுக்குவார்பட்டி (நிலக்கோட்டை வட்டம்) மணமகன் இல்லத்தில், தோழர் எம். எஸ். இராமசாமி தலைமையில், தோழர் காமராஜ்—தோழியர் மரகதம் திருமணம் நடைபெறும். தோழர்கள் கோவை-செழியன், கே. எஸ். சந்தானம், பி சமதர்மம், எம். முத்தா ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

'திட்டங்கள் இருட்டடிப்புத் திட்டங்களாக உள்ளன!'

'உதவி தரப்படுவது குறித்து மக்களுக்கு எப்படித் தெரியும்?'

'ஒதுக்கப்பட்ட தொகை செலவிடப்படாதது ஏன்?'

"இந்த நாட்டில் மண்ணுக்கும் பஞ்சமில்லை; மரத்திற்கும பஞ்சமில்லை; உழைப்புக்கும் கோடிக்கணக்கான மக்கள் காத்திருக்கிறார்கள்; பிறகு, வீட்டுப் பஞ்சம் எப்படி ஏற்பட்டது?

"எல்லாவற்றிற்கும் மேலாக பணத்திற்குப் பஞ்சம் என்று சிலர் நினைக்கலாம். மத்திய தொழிலாளர் மந்திரி கந்துபாய் தேசாய் கூறுவதைப் பார்த்தால், அதுகூட உண்மையல்ல என்று தெரிகிறது. கோயில்பட்டியில் அவர் கூறியுள்ளதைப் பாருங்கள்!

"குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும் தொழிலாளர்களுக்குமாக முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 38 கோடி ரூபாயில் வீடு கட்டும் திட்டத்தைத் தயாரித்தார்கள்; இதில் பாதிப் பணம்கூட செலவழிக்கப்படவில்லை; காரணம், இந்த உதவியைப் பெற்றுக் கொள்ள போதிய மக்கள் முன்வரவில்லை."

"மண்ணும் உண்டு; மரமும் உண்டு; உதவிக்குப் போதிய பணமும் உண்டு; பிறகு ஏன், மக்கள் முன்வரவில்லை?

"மச்சு வீட்டிலிருந்தாலும், குச்சு வீட்டிலிருந்தாலும கட்டையின் கதி ஒன்றுதான் —என்ற முடிவுக்கு அவர்கள் வந்துவிட்டார்களா? வீடில்லாதவர்கள் படும் அவதியைப் பார்த்தால் இது உண்மை என்று சொல்ல முடியாது. 'வானமே கூரை; வையகமே வாழ் வீடு' என்று, தெருவில் படுப்பதற்கு யாரும் விரும்ப மாட்டார்கள்.

"சர்க்கார் குமாஸ்தாக்கள், குறைந்த வருவாயுள்ள நடுத்தர மக்கள், தொழிலாளர்கள் போன்ற பகுதியைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலோர் வீடில்லாமல் அவதிப்படுகிறார்கள். அவதிப்படும் சர்க்காரிடம் உதவிபெற ஏன் முன்வரவில்லை?

"திட்டத்தையும், திட்டத்திற்கு ஒதுக்கிய பணத்தையும்தான் திரு. கந்துபாய் தேசாய் குறிப்பிட்டுள்ளார். மந்திரிக்குத் தெரியும இந்த விபரம்தான், மக்களுக்கும் தெரியும; ஒருவேளை, தொழில் நிர்வாகிகளுக்கு இதுபற்றிய விவரங்களை சர்க்கார் அறிவித்திருக்கலாம்.

"ஆனால், குறைந்த வருவாயுள்ள நடுத்தர மக்களுக்கு இத்திட்டம் குறித்து எதுவும தெரியாது.

"வீடு கட்ட முன்வந்தால், யாருக்கு மனுப் போடுவது? சர்க்கார் உதவி மானியமாகக் கிடைக்குமா? அல்லது, பாதி மானியம்-பாதி கடன் என்ற அடிப்படையில் கிடைக்குமா? முழுத் தொகையும் வட்டியில்லாக் கடனாகக் கிடைக்குமா? —என்பன போன்ற விவரங்கள் யாருக்குத் தெரியும்.

"திட்டம், டில்லியில் தயாராகியது; பேசுவதற்கு மந்திரி கோவில்பட்டி வந்துவிட்டார். இதைத் தவிர, மக்களுக்கு வீடு கட்டும திட்டம் பற்றி வேறு எதுவும் தெரியாது.

"வீடு கட்டும் திட்டத்தைப் போன்று பல திட்டங்கள் பொதுமக்களுக்கு இருட்டடிப்புத் திட்டங்களாகவே உள்ளன. இரண்டாவது திட்டத்தின்கீழ் வீடு கட்டும் அமசத்திற்கு 120 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள் என்று மந்திரி கூறுகிறார்.

"இத்திட்டத்தின்கீழ் யாருக்கு மனுப் போடுவது? 'மனு பாரங்கள்' எங்கே கிடைக்கும்? குறைந்த வருவாய் உள்ளவர்கள் என்பதற்கு வருமானம் எவ்வளவு இருக்கவேண்டும்? இத்தகைய விவரங்களை இதுவரையில் வெளியிட்டுள்ளார்களா?

"சிறு தொழில், குடிசைத் தொழில்களுக்கு உதவி கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று செய்திகள்தான் வெளிவருகின்றன; ஆனால், இந்த உதவியை எப்படிப் பெறுவது என்பது யாருக்கும் தெரியாது.

"செய்தி — ஒலிபரப்பு—தகவலறிவிப்புக்கு மந்திரி இருக்கிறார்; பார்லிமெண்டரி காரியதரிசியும் இருக்கிறார்; இதற்காக எவ்வளவோ இலாகாக்கள், அதிகாரிகள், ஊருக்கு ஊர் காரியாலயங்கள் போன்ற தடபுடல்களுக்கும் குறைச்சல் இல்லை. ஜீப் காரில் சினிமா படம் காட்டிவிட்டால், மக்களுக்கு எல்லாம் விளங்கிவிடாது.

"ஒவ்வொரு திட்டத்தையும் விளக்கமாக அறிவித்து, அதன் மூலம் கிடைக்கும் சலுகைகளை சகல மக்களும அடைய வழிமுறைகளையும் வெளியே சொல்லவேண்டும். இந்த வழிமுறைகள் இப்பொழுது பார்லிமெண்ட் மெம்பர்கள், சட்டசபை மெம்பர்கள், மந்திரிகள் போன்றவர்களில் வெகு சிலருக்குத்தான் தெரியும்.

"பல பார்லிமெண்ட் மெம்பர்களை இப்போது 'மானிய மனப்பான்மை' கவ்விக் கொண்டுவிட்டது; ஆகவே, உதவி வருமுன்பு அதற்கான வழிமுறைகளையும் தெரிந்து, அகப்பட்டதைச் சுருட்ட ஆவன செய்துவிடுகிறார்கள்.

"இந்நிலைமை மாறி, திட்டத்தின் முழுப் பயனையும மக்கள் அடைய வேண்டுமானால் அதற்கான வழிமுறைகளை சாதாரண மக்களும புரிந்துகொள்ளும்படி விளம்பர அதிகாரிகள் வெளியே எடுத்துச் சொல்ல வேண்டும். அப்போதுதான், திட்டமும், மக்களின் திட்டமாக இருக்கும; இல்லாவிடில், இடையே உள்ளவன் 'சதவிகித இலாபம்' அடித்துக்கொண்டு போய்விடுவான்."

—இவ்வாறு, 2—7—56 'நவ இந்தியா' இதழில், 'ஊர் வம்பு' என்ற பகுதியில், 'யு ஆ.' என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.